
புதிர் குகை!
ஜுனியர்
லயன் காமிக்ஸ
ரூ. 1-25
முழு வண்ண சித்திரக் கதை!


பாரிஸ்-லூயிஸ் XIII ஆண்டு வந்த காலத்தில் ஒருநாள்-
மதுபானக் கடை!
இரகசியப்பணி!
ணங்!
ஹூம்-பரவாயில்லே-ஆனல் இந்த களேபரத்தினூடே அதிபராக்கிரம ஜெர்ரியை எப்படி கண்டுபிடிப்பது?
யாரது என் பெயரை உச்சரிப்பது?
அட-தாங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்!


உங்களை கையோடு அழைத்து வருமாறு அரசியாரின் உத்தரவு. ஏதோ இரகசிய பணியாம்!
நான் வர மறுத்தால்?
குண்டுக் கட்டாக கட்டி தங்களை பாஸ்டல் சிறையினுள் போட்டுவிட்டு வருமாறு உத்தரவு!
ஓகோ- அப்படியா சமாச்சாரம்!
ஆனால்-வெளியில் யுத்தம் ஏதும் நடப்பதாக காணோமே?
ஊப்ப்-ப்!
டமால்!
ஹா-ஹ்-ஹா! பார்-பார்த்தீர்களா எத்தனை பரிதாபமாக விழுந்து கிடக்கிறான் என்று!
ராஸ்கல்! இதோ- நான் எழுந்ததும் அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று பார்-
நே-அப்படி என்ன நடக்கப் போகிறது?


முக்கியமான பிரமுகர் ஒருவரை நான் அவசரமாக சென்று சந்திக்க வேண்டியிருக்கிறது-
த்தனமாக சண்டை
டுக் கொண்டு நிற்க
நேரம் கிடையாது!
சற்று நேரம் கழித்து-
அதிபாக்கிரம ஜெர்ரி வந்திருக்கிறேன்!
நாளை மறுநாள் நடக்கவிருக்கும் நாட்டிய நிகழ்ச்சியில் நான் அணிந்து கொள்ள, குறிப்பிட்ட சில நகைகளை. இரகசியமாக இலண்டனுக்குச் சென்று நீ எடுத்து வர வேண்டும்-
படகில் போய் வந்துவிடுகிறேன்-அரசியாரே!
இதோ-பயணத்திற்கான என் உத்தரவு!


ஜாக்கிரதை-வழியில் அரசருடைய ஒற்றர் களின் தொல்லை இருக்கலாம்!
சமாளித்துக் கொள்வேன்!
ம்ம்-கிளம்பு-
பப்ப்-
எந்தக் கபட ஒற்றனும் இந்த அதிபாரக்கிரம ஜெர்ரியை முட்டாளாக்க முடியாது!
ஹெ! ஹெ! முட்டாள்ப் பயல்! நானே ஒரு ஒற்றன் தான்! குதிரை வேஷத் திலிருக்கிறேன்!
அந்திப் பொழுதில்-
'ஓய்வு மாளிகை'
இந்த சத்திரத்தில் தங்கி ஓய்வெடுத்துச் செல்வேன்!
கொர்-கொர்!
ஆனால்
ஒற்றன் புதியதொரு வேஷத்தில் இருந் தான்-!
ஹே-ஹே-தூண் மாதிரி நான் மாறுவேடமிட்டு நின்ற தால் பயல் சுலபமாக ஏமாந்து விட்டான்!
5



ஆவ் பயலேக் காணோமே! வைக்கோல் பொம்மைதான் இருக்கிறது - ஏமாற்றி விட்டானே!
எங்கே போய்த் தொலேந் தானோ?
உனக்கு மட்டும் தான் மாறுவேடம் புனேயத் தெரியுமோ-ஹா-ஹா!
இனி-பயணத்தை தொடரலாம்-
அடச்சே! குதிரையை எவனே திருடி விட்டான்! அந்த அயோக்கியன் மட்டும் என் கையில் அகப்பட்டால்-
விடிகாலே வேளேயில்-
படகுத் துறை!
ஹலோ-இந்தப் படகு வாட கைக்கு கிடைக்குமா?
ஓ - தாராளமாக எடுத்துச் செல் லுங்கள். பிரபு!


ஹீ-ஹீ-கடலினுள் நகர்ந்ததும், தெரியும் சேதி!
ஊய்ய்- பறந்து விட்டானே!
பயணம் நீண்டு கொண்டே போனது
இறுதியில்-
ஹாவ்-நான் எங்கே வந்து சேர்ந்திருக் கிறேன்?
ஓ-நிலம்-இங்கிலாந்து! வெற்றி! அதோ-அங்கே ஒரு ஆங்கிலேயனின் தலை தெரிகிறது!


ஹே-உனக்கு பிரெஞ்ச் தெரியுமா-மிஸ்டர்?
நன்றாகவே தெரியும்! இதில் கேள்விக்கு இடம் ஏது?
ஓ-உளவுப்படை வீரர்கள். இது இங்கிலாந்து இல்லையா? பிரான்ஸ் கடற்கரையோரம் தானா?
வகையாக அகப்பட்டுக் கொண்டு விட்டாய்-ஜெர்ரி!
அதிபராக்கிரம ஜெர்ரியை கோபப் படுத்துகிறீர்கள்! கத்திச் சண்டைக் குத் தயாராகுங்கள்!
முழிக்கிறதைப் பார்-சரியான கோணங்கித் தனம்!
இதோ!
ஓஓ!
ஹோ-ஹோ!


கத்திச் சண்டை போடும் முகரையைப் பார்!
ஹா ஹா-ஹோ-ஹோ ஊஊஊ - தமாஷ் நல்ல-வேடிக்கை!
என் சூழ்ச்சி பலித்து விட்டது! நைஸாக தப்பியோடி விடலாம்!
குட்மார்னிங்-மைடியர்!
தலை நகரை நோக்கி-பிடி ஓட்டம்!
ஹீ-ஹீ!
என் மாறு வேடம் இம் முறை பயலை ஏமாற்றி விட்டது!
ஆனால்-
ஓ-எல்லைவரி சாவடி!
இவனை இறுதிவரை நான் பின் தொடர வாய்ப்புண்டு-
எல்லை வரி தடை நிறுத்து!



பணம் இல்லை-என் பசுவை வைத்துக் கொள்கிறாயா?
அதுவும் சரிதான்!
இன்று யார் முகத்தில் விழித்தேனோ-அதிர்ஷ்டமான நாள்!
நான் சென்று வரட்டுமா?
இனி நீ உளறமாட்டாயல்லவா!
ணாங்!
பசு வேடத்திலிருந்த ஒற்றன்!
ஒருவழியாக வந்து சேர்ந்து விட்டேன்!
கதவு போல் மாறு வேடமணிந்து நான் நிற்பதை பயல் கண்டு கொள்ளவில்லை!
அரசே-நான்-ஜெர்ரி வந்திருக்கிறேன்!


கும்!
குட்-பாஸ்டல் சிறைக்குக் கொண்டு போ, இவனை!
உத்தரவு-அரசே!
அதி பராக்கிரம ஜெர்ரி சிறையில் அடைக்கப்பட்டார்-அதே சமயம்-
ஒற்றனே-நீ ஜெர்ரி போல் மாறுவேட மணிந்து கொள்.
ஆகட்டும் அரசே!
அரசியிடம் சென்று நைச்சியமாக இந்த விவகாரத்தின் உண்மையை தெரிந்து கொண்டு வா-
இதோ- அங்கே ஓடுகிறேன் அரசே!
மேன்மைதகு அரசியாரே-
அந்த நகைகளுக்கு அவசியமில்லை ஜெர்ரி- இன்றுமாலை நடக்கவிருக்கும் நாட்டிய நிகழ்ச்சிக்கு இங்குள்ள நகைகளிலேயே இவற்றை தேர்தெடுத்துக் கொண்டு விட்டேன்!
இது போலி ஜெர்ரி!


நான் உன்னை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்த இரகசியம் வெளிப்பட்டு விடாமலிருக்க கொஞ்ச காலத்திற்கு உன்னை பாஸ்டல் சிறையினுள் அழைத்துப் போட உத்தரவிடுகிறேன்!
ஐயோ!
இன்னும் ஒருவன் வருகிறான் - இதோ!
சிறையில், அசல் ஜெர்ரியும், உல்டா ஜெர்ரியும்-
ஊப்ப்!
என்ன?
நீயா?
நானா?
நாம்!
டமால்!
முற்றும்!



ஆர்டின் மரணம்
பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு அமெரிக்காவை நிர்மாணிப்பதில் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் பணியாற்றிய கடமை வீரர்களில் ஒருவரான கிட் ஆர்டின், அரிஸோனா பகுதி ஷெரீப்பின் உதவியாளர்... தோற்றத்தில்-எளியவர்! சுபாவத்தில் படு அப்பாவி!
இதோ... நம் கதாநாயகர்!
உடல் வலிமையும், மனத் திண்மையும் கொண்ட செயல் வீரர்களுக்கு, பெரும்பாலான வேளைகளில், அவர்களுடைய குதிரைதான் உற்ற தோழனாகக் கூடும்...
அவர்களுடைய நம்பிக்கைக்கும், பேரன்பிற்கும் பாத்திரமான அந்தக்குதிரைகள் மட்டும் அவர்களோடுஇல்லாது போயிருந்தால், பாலை நிலங்களினூடே அவர்கள் மேற்கொண்ட நீண்ட, கொடிய தனிமைப்பயணங்கள் அவர்களை மனநோயாளிகளாக்கி விட்டிருக்கக்கூடும்!
சே... பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் ஒரேடியாக போரடிக்கிறது!
கொர்... கொர்...


தாங்காது...! மாஸ்டரை எழுப்பி அவரோடு எதாவது கதையளக்கலாம்!
ஹீய்ய்!
எ எ எஎன்ன ஆச்சு! ஓ...கோ-லேசாக கண்ணயர்ந்து விட்டேன் போலிருக்கிறது!
அப்படியானல் பாஸை நான் சந்தித்தது...? கனவிலா?
சே- என்ன மனிதர்- கனவிலும் வந்து மிரட்டிக் கொண்டு! பாஸ் இப்போது என்னை எல்லையோர கண்காணிப்பு மையத்திற்கு அனுப்பக் காரணம்?
...மெக்ஸிகன்-விஷமிகளின் ஊடுருவலை கண்காணிக்க இருக்குமோ?
அடடா... என் திறமையின் மீது அவருக்குத் தான் எத்தனை நம்பிக்கை!
அட... போதுமே-தற்பெருமை!
14



யாரோ என்னைப் பின்தொடர்ந்து வருவதுபோல் பிரமை ஏற்படுகிறதே!
என் தலையெழுத்து-இந்த வனாந்தரத்தில் இப்படி அலைந்துகொண்டிருக்கிறேன், வேறு எவன் இங்கே வரப் போகிறான்? .. ஹூம்-
பானத்தை கொஞ்சம் ஊற்றிக் கொள்வோமா-உற்சாகமாக இருக்கும்!
க்ளக் . க்ளக் .. க்ளக்
அடடா... என்ன ருசி... என்ன ருசி!- அருமை! இந்தாடா பயலே நீயும் கொஞ்சம் பருகு...!


ஜாஸ்மின் டீ, சாக்லேட் கலந்த மதுக்கஷாயம். என் சொந்த தயாரிப்பு-அமுதம்தான் .. போ!
புர்ர்ர்.ர் !!!
ஏன்....ஏன்—உனக்குப் பிடிக்கவில்லையா?
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை-சே... உனக்குப் போய் கொடுத்தேனே...!
பின்னர்-
இந்தப் பிராந்தியத்தில் தண்ணீர் கிடைக்குமென்று கற்பனையிலும் நான் எண்ணியதில்லை-உன் அதிர்ஷ்டம். வேண்டிய மட்டும் இஷ்டம்போல் குடி!
யாரோ மறைந்திருந்து என்னை கண்காணிப்பதாக குறுகுறுக்கிறதே!
கண்டிப்புமிக்க பாஸின் மனம்தான் விடாமல் என்னை பின்தொடர்ந்து வருகிறதோ?


பின்னர்-
அதோ... கண்காணிப்பு மையம்—
அரிஸோனாவில், மெக்ஸிக எல்லையின் பெரும்பகுதியை கண்காணிக்க ஏற்ற ஒரே இடம் இதுதான்!
இனி ஒரு வாரத்திற்கு ஐயாவின் ஜாகை இதுதான்!
என்னை பொறுப்பிலிருந்து விடுவிக்க பாஸோ, சிக்பில்லோ தாமதமின்றி வந்து சேருவரர் கள் என்று நம்புகிறேன்!
சே- படுபயங்கரமான இடமப்பா இது! ஒரு ஜன்னல்கூட கிடையாது- எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆயுதங்கள்தான்! ஏதோ வெஞ்சிறையில் அடைக்கப்பட்டிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறது!



அதிர்ஷ்டவசமாக உணவுப் பொருட்கள் தாராளமாகவே இருக்கின்றன!
அட . ஒரு பெட்டி நிறைய லாலி-பாப் கூட இருக்கிறதே!
சிக்பில்லின் தயவு போலும்!
அருமை... அருமை எனக்குத்தான் எத்தனை தோழர்கள்!
படார்!
கதவை அறைந்து சாத்தியது காற்றாகத்தானிருக்கும்!
சளப்ப்! சளப்ப்!

ஜூலை-2


ஆனால் காற்று இப்படி தாழ்ப்பாளையும் போடுமா... என்ன?
டகடக்டட்
... இல்லை-குதிரையிலேறி சவாரிதான் செய்யுமா?
ஹே .. போதும் விளையாட்டு-கதவைத் திற... என்னை அடைத்துப் போட்டுவிட்டு ஓடாதே...
இதோ... இந்த டெலஸ்கோப் மூலம் பார்த்துவிடலாம்-இந்த சேஷ்டையை செய்த கோணங்கி யாரென்று!
இந்த குன்றின் அடிவாரத்தின் வழியாகத்தான் அவன் சென்ருக வேண்டும்... ஹே-ஒருவேளை என் குதிரைதான் கதவை உதைத்து சாத்தியிருக்குமோ?
ஆனல்... ஆ- அந்த சண்டாளன் என் குதிரையையும் அல்லவா கவர்ந்து செல்கிருன்!
19


சுட முடியாத தொலைவுக்கு போய்விட்டானே-தொலைந்தேன்...!
ஊஹூம் அப்படிசொல்வதற்கில்லை!-இதுதற்காலிகமான பிரச்னைதான்-அதாவது என்னை விடுவிக்க அடுத்த நபர் வந்து சேரும்வரை..
ஆனால் எப்போது?
உணவுப் பொருட்கள், தண்ணீர்... லாலி-பாப் வேண்டிய மட்டும் இருக்கின்றன... அப்பாடா பிழைத்தேன்!
தேசப்பற்றுமிக்க கடமை வீரர்கள்தான் என்ற போதிலும் அவர்களும் மனிதர்கள்தானே...
கொர்...கொர்-



கன்ஸ்மோக் அரிஸோனுவிலேயே மிக அமைதியான நகரமாக இருக்கக்கூடும்-அதன் ஷெரீப் டக்புல் மட்டும் அங்கே இல்லாதிருந்தால்-
எல்லாவற்றையும் உடைத்து நொறுக்கப் போகிறேன்!
கொஞ்சம் அமைதியாக இருங்கள். .-வந்துவிடுவார் ... சீக்கிரமே
அமைதியாகவா...? எப்படி-
கொஞ்சம் விஸ்கி ஊற்றித் தருகிறேன்-உங்களை இது சாந்தப் படுத்தும்...!
வேண்டாம்! அந்தப்பயல் இங்கே காலை வைக்கும்போது என் அனைத்து புலன்களும் முழு தெளிவோடு இருக்க வேண்டும்.
வாஸ்தவம்தான்...
ஆனல் நான் நாற்காலிகளை மனதிற்கொண்டு அப்படிச் சொன்னேன்.... ம்ம்-இது வரை நீங்கள் ஐந்து நாற்காலிகளை நொறுக்கி விட்டீர்கள்!
அப்படியா ?
ஆமாம்...ஷெரீப்!
என் கையில் வந்து அவன் சிக்கியதும், அவனை என்னபாடு படுத்தப் போகிறேனென்று ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேனில்லையா?
ஆமாம்-பலமுறை ..! மறுபடி சொல்லுங்கள்-உங்களு கோபத்தை அது தணிக்கும் என்றால்!


அவனை பத்து மீட்டர் முள் வேலி கம்பியை தின்னச் சொல்வேன். பெரிய பீப் பாய் அளவு கந்தக அமிலத்தை அவன் மீது அபிஷேகம் செய்வேன் - அப்புறம்
திரியுடன் கூடிய பெரிய டைனமைட் குச்சியை விழுங்கச் சொல்லி ..
ஹலோ ஷெரீப்!
...தீ வைப்பேன் -
ஹா ஹா ...!
யாரது-சிக் பில்லா? அவனைப் பார்த்தாயா?-வந்துவிட்டானா?
இல்லை- இன்னும் வரவில்லை! தாமதிக்கிற ஆசாமி இல்லை- நீங்கள் அலட்டிக்கொள்ள வேண்டாம்- கொஞ்சம் தூங்கினாலும் தேவலை!
தூக்கமா? உனக்கென்ன பைத்தியமா ? நிலவரம் இப்படி இருக்கையில் நான் எப்படி நிம்மதியாக தூங்க முடியும்... சொல்!
ஆனால் எத்தனை நெருக்கடியிலும் நிச்சிந்தையாக துயிலும் அதிர்ஷ்டசாலிகள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள்
கொர்... கொர்...


பயங்கரம்... ஒரு லாலி-பாப் கூட இல்லையே!
சே... அத்தனையையும் ஒரே மூச்சில் தின்று தீர்த்துவிட்டேன் போலிருக்கிறது!
எனக்கு என்ன ஆகப் போகிறதோ-தெரியலே!
இங்கே பொறுப்பேற்க மாற்று நபரை உடனே அனுப்பித் தொலைக்காமல் அங்கே அவர்கள் பாட்டுக்கு குஷாலாகயிருப்பார்கள். ஆனால் நான் வதைப்படுகிறேன்!
இங்கே என்கடமைமையை சிறப்பாக செய்து முடித்துவிட்டேன். பாஸ் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி நான் இதோ புறப்பட்டு விட்டேன்!
ஆனால்-
பொறுப்பில் இருக்கும்போது, பணியை உதறிவிட்டுச் சென்ற குற்றத்திற்காக உன்னைத் தூக்கிலிடப் போகிறேன்.
கொஞ்சம் நிதானமாக சிந்திப்பது நல்லது...
23


இறுதியாக ஒருமுறை சிகரட் புகைக்க விரும்புகிறுயா?
ஹி-ஹி! சிகரெட் வேண்டாம்- ரசித்துச் சுவைக்க ஒரு லாலி-பாப் இருந்தால் கொடுங்கள்!
பணியை உதறிவிட்டு ஓடிப் போன பொறுப்பற்ற கழுதைக்கு லாலி-பாப்- ஹா! ஹா!
ஆ . ஐயோ- வேண்டாம்!
வருவது வரட்டும்! தீர்மானித்தது தீர்மானித்ததுதான்-நான் செல்லத்தான் போகிறேன்.
டமால்!
ஆண்டவனே! கதவு பூட்டிக் கிடக்கிறது என்பதை மறந்து தொலைத்துவிட்டேனே!
வழியா இல்லை- இதோ...



எல்லோரும் என்னை மாங்காமடையன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்- ஆனால் எத்தனை சமயோசிதமாக தோட்டாவால் பூட்டை சிதறடிக்கப்போகிறேன் நான்!
ஜாக்கிரதை! அரசுக்கு சொந்தமான பூட்டை நாசம் செய்வது கிரிமினல் குற்றமாகும்!
ஊசத்தானே- தொலைந்து போ
குமீல்!
அடுத்து பூட்டை குறிவைப்பேன்! வேண்டிய மட்டும் நெருங்கிச் சென்று!
குமீல்
குறி தவறிவிட்டது! நான் ரொம்ப பரபரப்போடு இருப்பது தான் காரணம்!- நிதானம் வேண்டுமடா பயலே!- சரி மீண்டும் நிதானமாக குறி வைக்கலாம்!


டுமீல்! டுமீல்! டுமீல்
டுமீல்! டுமீல்! டுமீல்!
ஆனாலும் இந்தக் கதவுக்கு திமிர் அதிகம்தான் -ஆனால் என்னிடம் பலிக்குமா?
சுதந்திர வேட்கை கொண்ட மனிதனை ஒரு வழுக்கைத்தலை பாஸோஒரு கதவோ தடுத்து நிறுத்திவிட முடியாது
என்னைத் தட்டிக் கேட்க நினைப்பவனுக்கு நிச்சயமாக ஆபத்துத்தான்!
ஹலோ...கன்ஸ்மோக் இதோ உன்னை நோக்கி திரும்பிவந்து கொண்டிருக்கிறேன்!


திடீரென்று நான் போய் எதிரில் நின்றதும் பாஸின் முகம் போகப் போகிற போக்கை நினைக்கையில்... ஹாஹ் ஹா...—
உருட்டி விழித்தார் என்றால்.. இந்த துப்பாக்கியால் மண்டையில் ஒரே போடு போட்டுவிடுவேன்!
தாடையில் நான் விடுகிற குத்தில் அவருடைய மீசை தொண்டைக் குள்போய் சிக்கிக் கொள்ள வேண்டும்!
... விந்தைதான் - நான் நடக்க நடக்க எதிரே யுள்ள மலைத்தொடரும் பின்னால் பின்னால் போகிறதே!
கையோடு கொஞ்சம் தண்ணீரை எடுத்துவர மறந்துவிட்டேன் - என் தொப்பியையும் தான்...! முட்டாள்தனமாக அவசரப்பட்டு ஓடிவந்து விட்டேன்!
27


வரும்போது இந்த வழி யாகத்தான் வந்தேனு..? சந்தேகமாக இருக்கிறதே!
குதிரையோடு வந்தி ருந்தால் பாதை தவறிவிடும் அசம்பா விதம் நிகழாது..
...தாகம் நாக்கை வறட்டுகிறதே!
லாலி-பாப்பை ஏகமாக தின்று தொலேத்த தால் இப்படி அதிகமாக தாகம் எடுக்கிறது!
மெல்ல ஏதாவது கற்ருளே கிடைத்தால்கூட நா வறட்சி கொஞ்சம் குறையக்கூடும்!
ஒரு குட்டித்தூக்கம் போட்டால்... பிறகு எல்லாம் சரியாகப் போகும்!
நம் வீர தீர கதாநாயகர் வெயிலின் கடுமையிடம் சரணடைந்து விடுகிருர்-



பல மணி நேரம் கழித்து திடீரென-வானில் சஞ்சரிப்பது போன்ற பிரமையுடன் எழுகிறார்-
ஐயோ... வெடித்து விடப் போகிறார்...
கீளக்! கீளக்!!
கொஞ்சம் நிதானமாக குடியுங்கள்-புரை ஏறப் போகிறது!
அ...ப்...பா ..டா! உயிரே போய்விடும்போல் அப்படியொரு தாகம் .. எல்லாம் அந்த லாலி-பாப்பினால் வந்த வினை!
தாங்கள் யாரென்று நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?
ஓ... தாராளமாக!என் பெயர் ஆர்டின் கன்ஸ்மோக்கை சேர்ந்தவன்.
ஆர்டினா? தேசப்பற்றுடைய தியாகச் செம்மல். மக்களின் பாராட்டுக்கும் பெருமதிப்பிற்கும் உரியவர்?


ஹி... ஹி... ஆமாம்-அது நான்தான்! என்னை உங்களுக்கு ஏற்கனவே தெரியுமா?
ஆமாம் .. அவருடைய வீரப் பிரதாபங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம்!
உண்மையாகவா?
இந்த பிராந்தியத்தில் மிகப் புகழ் வாய்ந்த நபர் நான் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்!
என்னைக் கொஞ்சம் பேசவிடுகிறாயா...?
எங்களை என்ன முட்டாள்கள் என்று நினைத்தாயா?
என்ன...? யார் உங்களையா?- நானா?
அப்பா . கொஞ்சம் அமைதியாக இருங்கள்!
பெருமைமிகு ஆர்டின் அவர்கள்கன்ஸ்மோக்கில்அமரத்துவம் அடைந்துவிட்டார்...
இறந்துவிட்டாரா...? இருக்காது-எனக்குத் தெரியாமலா...?
அப்பா!
வரவர ஜனங்கள் முக்கியமான செய்திகளை கூட எனக்குத் தெரியப்படுத்துவதில்லை!


பாவம் வனாந்தரத்தில் தனியாக காலம் கழித்ததில் மூளை பிசகிவிட்டிருக்கலாம்
தங்களை நெப்போலியன் என்று சிலர் சொல்லிக் கொண்டு அலைவதுண்டு...
நான் செத்துவிட்டேன் என்றால் அதைக் கூடவா அவர்கள் எனக்கு தெரிவிக்கக் கூடாது?
கொஞ்சம் தண்ணீர் கொடுத்து, அவர் போக்கில் செல்ல விட்டுவிடலாம்!
அதுதான் சரி!
இந்தா... உனக்கு வைத்துக்கொள்-ஆளை விடு!
ஆனாலும் ஷெரீப்பின் உதவியாளரை நீங்கள் நடத்தும் விதம் சரியில்லை!
தொலைகிறது...!
பாதையை சொல்லிவிட்டுப் போங்கள்!
அசல் ஆர்டினாக இருந்தால் தன் சொந்த நகருக்கு பாதை தெரியாமலா இருக்கும்?
கன்ஸ்மோக் நேர்மேற்கே இருக்கிறது மிஸ்டர் நெப்போலியன்!
ஹே.. நன்றி!
ஆனால்... எது மேற்கு? இந்தக் கேள்வியை அவரிடம் கேட்டிருந்தால் நிச்சயம் மென்னியை முறித்திருப்பார்.


ஆவ . மதார்ந்து கொண்டு விட் டேன்! அதோ-சூரியன் வழக்க மாக கன்ஸ்மோக் இருக்கும் திசை யில்தான் அது அஸ்தமிக்கும்!
என்னைப் போய் நெப் போலியன் என்றாரே! புத்திசுவாதீனமில்லா தவர் போலும். பாவம் அந்தப் பெண்!
செத்துப் போன நபரை நேரில் பார்த்த அதிர்ச்சியில் மூளை பிசகிவிட்டதோ? ஆனால் இந்த செய்தியை யார் பரப்பியிருப்பார் கள்? பாஸுக்கும் செய்தி எட்டியிருக்க லாம்! அதை நிஜமென்று அவரும் நம்பிக் கொண்டிருக்கக்கூடும்!
நான் போய் எதிரே நின்றதும்...
ஹா...ஹ்...ஹா! அவரை மிரள வைக்க அருமையான வாய்ப்பு! வேடிக்கைக்கு குறைவு இராது! வயிறு குலுங்கச் சிரித்து மகிழலாம்!
நன்றாக இருள் கவிழ்ந்த பின் நகரினுள் சென்றால்தான் வேடிக் கை மிகசுவாரஸ்யமாக இருக்கும்! எனவே, இங்கே கொஞ்ச நேரம் தங்கிவிட்டுச் செல்வேன்!
என்ன எழுதியிருக்கிறது...
"நீதிக்கும் நேர்மைக்கும் போராடிய தன்னலமற்ற தியாகச் செம்மல் ஆர் டின் இங்கே துயில்கிறார்"



இ-இ-இது-என்னுடைய கல்லறை! படுபயங்கரமான தவறு ஏதோ நடந்து விட்டிருக்கிறது!
... என்னை உயிரோடு புதைக்க பாஸ் எப்படிச் சம்மதித்தார்?
கனவா .. இல்லை பிரமையா? அடக் கடவுளே .. அங்கே ஓடுவது-?
உடனே போய் சிக் பில்லிடம் இதைத் தெரிவிக்க வேண்டும்!
அந்தச் சிலை ..? என்னுடைய உருவச் சிலைதான்!
ஐயோ .. என் மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது!


கனவா . நனவா... இல்லை மூளைக் குழப்பமா- எனக்கா ...அல்லது பாஸுக்கும் இந்த நகரத்து ஜனங்களுக்குமா?
SHERIFF'S OFFICE
பாஸ் .. இங்கே யார் பைத்தியம்?
ஆர்டின்... இங்கே எப்படி வந்தாய் ..?
வந்து...
ஹே . -ம்ம் .. யார் நீ?
என்ன பாஸ்... திடீரென்று-


நான் .. -உங்கள் அன்புக்கு பாத்திரமான உதவியாளன்... ஆர்டின் பாஸ்.. !-மக்கள் புகழும் தொண்டன்!
விவகாரமா பண்ணுகிறாய்! தியாகச் செம்மல் ஆர்டின் என்று சொல்லி ஆள்மாருட்டம் செய்ய உனக்கு என்ன துணிச்சல்?
வந்து... என்னைப் பார்த்தவுடன் நீங்கள் கூட ஆர்டின் என்று அழைத் தீர்களே பாஸ்!
நான் தொடர்ந்து அவனையே நினைத்துக்கொண்டிருந்ததால் அந்த தவறு நேர்ந்திருக்கலாம்- இந்த நகரை சமூக விரோதக்கும்பலின் பிடியிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் வீரமரணமடைந்த தியாகி அல்லவா அவன்!
மீண்டும் உயிர்த்தெழுந்து வந்திருக்கிறேன்... பாஸ்!
நிச்சயம் அவன்தானு?
சந்தேகமேயில்லை- இரண்டு ஆர்டின்கள் இருக்க வாய்ப்பில்லையே?
ஆவ்... ஷெரீப்- விபரீதம்...! அவன்திரும்பிவந்து விட்டாளும்!
தெரியும்!
அவனிடம் என்ன சொன்னீர்கள்?
அவன் ஏற்கனவே செத்து போய்விட்டதாக சொன்னேன். அவன் குழப்பத்தோடு முழிக்கும்போதே, அடித்து சுயவுணர்விழக்க செய்து, சிறையில் அடைத்துவிட்டேன்!


ஆனால்... நீங்களிருவரும் இங்கே ஏன் வந்தீர்கள்- அங்கே நின்று கண்காணிப்பை தொடர்வதை விட்டுவிட்டு?
அஹ்...
சிறையிலிருந்து தப்பிவிட்ட ப்ளாக் ஸ்கெலெட், ஆர்டினை கொன்று பழி தீர்த்துக் கொள்ளப் போவதாக அறிவித்த உடனே ஆர்டினை கன்ஸ்மோக்கை விட்டு வெளியேற்றி வெகு தொலைவுக்கு அனுப்பிவிட்டு பொருத்தமாக மற்ற ஏற்பாடுகளையும் செய்து வைத்தோமல்லவா? அதை-
திட்டப்படி அவனது குதிரையையும் தான் நான் கவர்ந்துவந்துவிட்டேனே- பின்னர் எப்படி இவ்வளவு விரைவாக இங்கு வந்து தொலைந்தான்- ஆபத்தை நோக்கி?
நல்ல முயற்சிதான்!
ஆனால் இந்த நினைவுச் சிலையை பார்த்து ஏமாந்து போகிற சோணகிரி நானில்லை!
அவனை பிடித்து சிறையில் அடைத்து வைத்திருப்பவர்களுக்கு நன்றி... என் வேலை சுலபமாகிவிட்டது!



எனக்கு ஆயுள் தண்டனை வாங்கி கொடுத்த அந்த கோமாளியை கண்ட துண்டமாக வெட்டிப்போட்டால்தான் என் ஆத்திரம் அடங்கும்!
அடேய்... முட்டாளே!
முட்டாளா...? என்னை... தெரியுமா உனக்கு!
இந்த உராங் உட்டான் முஞ்சியை எங்கேயோ பார்த்திருக்கிறேனே!
தெரியுமாவா...? ஹா... ஹ... ஹா ஆர்டின்...! என்னை வெஞ் சிறைக்கு அனுப்பிவைத்த அறிவிலி!
நீ...நீ ப்ளாக் ஸ்கெலெட் அல்லவா?
இளிக்காதே...! உன் குடலை உருவ வந்திருக்கிறேனடா மடையா!
ஹாய்... அது சாத்தியமேயில்லை அப்பனே! வீண் அலட்டல்!
என்ன உளறுகிறாய்?
ஆமாம்...! சொன்னால் நம்ப மாட்டாய்-உன்னை கிண்டல் பண்ணுகிறனே என்றுகூட நினைப்பாய்!
சொல்லித் தொலை... சனியனே!


என்னை நீ கொல்ல முடியாது . ஏனென்றால் நான் ஏற்கனவே செத்துப் போய்விட்டேன்!
ஹீ ... ஹீ ... ஈஈ!
என்ன-மூஞ்சி அப்படித் தொங்கிப் போய் விட்டது?
பித்தலாட்டமா பண்ணுகிறாய்... உன்னை இப்போது என்ன செய்கிறேன்... பார்!
ஹே .. ஜாக்கிரதை-நீ ..
உன் தலை கம்பிகளினூடே மாட்டிக்கொண்டது பார்-
சைத்தானே .. என்னிடமா விஷமம் பண்ணுகிறாய் .. உன்னை-
ஹி ... ஹி-எக்கச் சக்கமாக சிக்கிக் கொண்டுவிட்டாய் ..! ரொம்ப நாளாக எனக்கு ஒரு ஆசை .. இரு வருகிறேன்!
உன் வழுக்கைத் தலையில் தேங்காயை சிதறுகாய் போட வேண்டுமென்று-கை வசம் தேங்காய் இல்லையாதலால் ...


சும்மா சொல்லக்கூடாது .. உறுதியான மண்டைதான்!
பாஸ்!... பாஸ்!
...என்ன ஆச்சு-ஆபத் தில்லையே... உனக்கு?
அப்பாடா-நான்தான் என்று இப்போதாவது தெரிந்து கொண்டீர்களே! வந்து பாருங்கள்-யாரை மடக்கிப் போட்டிருக்கிறேன் என்று! ப்ளாக் ஸ்கெலெட்! நான் மட்டும் இல்லையெனில் என்னென்னவோ விபரீதங் களை விளைவித்திருப்பான். ஆமாம்-என்னை எதற்காக அடைத்துப் போட்டீர்கள் பாஸ்?
உன்னை காப்பாற்றுவதற்காக... எனதருமை கண்ணு!
ஆகா... என்மீது உங்களுக்குத் தான் எத்தனை அன்பு-அதுசரி... யாரிடமிருந்து காப்பாற்ற?

# டிம்மி & ஜெர்ரி தோன்றும் புதிர் குகை!





மூடு வாயை!
ணங்!
சங்கீத ஞானம் இல்லாத மடையா!
ஐயையோ- கெட்டது காரியம்!
!
ஓடிவா கிளியைஎப்படியேனும் பிடித்தாக வேண்டும்- இல்லையேல் பிண்டன் நம் தோலை உரித்துவிடுவது உறுதி!
டிம்மி- உள்ளே எதுவுமே தெரியவில்லை!
வாக் மேனை கழற்றி விட்டு என்னை பின் தொடர்ந்து வாடா மடையா!
நீ என்ன சொல்கிறாய்?
வாக்-மேனை கழற்றித் தொலை!
வாக்-மேனை கழற்றிவிட்-டேன்- ஆனாலும் எது-வுமே தெரியக் காணோமே?



ஐயையோ
ஷொய்ங்!
இப்போது நாம் எங்கே இருக்கிறோம்!
தண்ணீரினுள்- இது கூடவா தெரியலே!
டிம்மி எனக்கு பயமாக இருக்கிறது!
கோழை- எதற்காக நாம் பயப்பட வேண்டும்!
ஹப்ப்ப்!
ஹா! ஹா! இந்த துவாரத்தின் வழியாக காற்று சீறிக் கொண்டு வருவதால் ஏற்படும் ஓசை இது! வீணாக கலவரமடைந்து விட்டோம்!
புஸ்ஸ்!
பயப்படத் தேவையில்லே என்று அப்போதே நான் சொன்னேனில்லையா?



சர்ர்ர்...!
கீழே கீழே- பாராசூட்டில் இறங்குவதுபோல் எத்தனை ஜாலியாக இருக்கிறது- ஆகா- ஹா!
இந்த ராட்சஸ இலைகள் நம்மை தாங்கிப் பிடித்து நம் எலும்புகள் நொறுங்கி விடாமல் காப்பாற்றிவிட்டன!
பொத்!
43


நம்ப முடியாத விந்தை! மினுமினுக்கும் குகையினுள் வந்து சேர்ந்திருக்கிறோம்!
ஏகப்பட்ட பூக்கள் விதவிதமாய்!
ஏய்- ஜாக்கிரதை!
அவுக்!
ஐயோ- அம்மா!


டிம்மி மசமசவென்று நில்லாதே-
என்னைக் காப்பாற்ற ஏதாவது
செய்- சீக்கிரம்!
குட்மார்னிங்- என்
பெயர் மாக்- நான்
ஒரு மோர்லாக்!
குட்மார்னிங்- என் பெயர்
டிம்மி- ஜெர்ரியை காப்-
பாற்றியதற்கு நன்றி!
வாருங்கள்- எங்களுடைய
குடியிருப்பு பகுதிக்கு!
அங்கே ஆபத்து வராது!
இந்த மோர்லாக்கள்
எங்கிருந்து வந்தார்கள்?
இந்தப் பகுதியில் வசிக்கின்ற-
வர்கள் என்று நினைக்கிறேன்!
இதோ என் சகோதரர்கள்-
பாக், சாக், டாக், ராக், வாக்-
அவை என் சகோதரிகள்-
பாக்கட், சாக்கட், டாக்கட்,
ராக்கட், வாக்கட்.


நாங்கள் தரைக்கு அடியில் வாழவேண்டிய நிர்ப்பந்தம்! ஏனெனில் சூரியனின் கதிர்கள் பட்டால் எங்களுடைய தோல் வெந்து போய்விடும். எங்களுடைய பார்வையும் போய்விடும்!
ரோஜர்!
டிம்மி! நம் ரோஜர் இதோ இருக்கிறது!


குட்டிச் சாத்-தானே உன்னை-
ஐயோ அது என்ன?
டோபோஸாக்!
கட-கட-கட-!
ஆமாம்- அது ஒருவகை ராட்சஸ புழு- இங்குள்ள அசைவ செடிகளின் விதைகளை தின்பதென்றால் ரொம்ப இஷ்டம் இதற்கு. அடிக்கடி இங்கே வந்து அட்டகாசம் பண்ணும்!
டோபோஸாக்?
வரும்போதெல்லாம் எங்கள் குடியிருப்பு பகுதியில் நாசம் விளைவிப்பதோடு சில மோர்லாக்குகளையும் கபளீகரம் செய்துவிடும்!
ஒரு ஐடியா! வெற்றி பெறுமா என்று சொல்வதற்கில்லை- ஆனால் முயன்று பார்க்கலாம்!
யாராவது உடனேபோய் அந்த விதைகளை சேகரித்துக் கொண்டு வரமுடியுமா?
ஊருக்கு வெளியே நிறைய கிடைக்கும்- இதோ நானே போய் அள்ளிவருகிறேன்!


ம்- ஓடு சீக்கிரம்! டோபோஸாக் நெருங்கி வந்துவிட்டது!
சற்று நேரம் கழித்து -
இதோ அந்த விதைகள்!
தாமதித்து விட்டோம்- இதோ வந்து விட்டது டோபோஸாக்!
ரோஜர் இந்தவிதைகளை விழுங்கு-ம்- சீக்கிரம்!



யுக்தி பலித்து விட்டது!
ஙே!-ஙே!
ஹா! ஹா! என்ன வேகத்தில் பறக்கிறது!
அந்த விதைகளுக்கு இப்படி ஒரு அரிய சக்தி இருப்பதை எப்படி நீ அறிவாய்?
ராட்சஸ மலர்களின் விதைகளையே அந்த டோபோஸாக் தேடிப் பிடித்து உண்ணும் என்று மாக்சொன்னான்-அதனால்தான் அந்தப்புழு இப்படியொரு ராட்சஸ வளர்ச்சி பெற்றிருக்கக்கூடும் என்று கணித்தேன்!
49






''லயன் புக் ஹவுஸ்'' நிறுவனத்தின் சார்பாக ''ஜுனியர் லயன் காமிக்ஸ்'' வெளியிடுபவரும் ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: லயன் புக் ஹவுஸ், த. பெ. எண். 55, சிவகாசி-626 123. வெளியிடுவோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. போன்: 21159.



அதையடுத்து -
தரை மட்டத்திற்கு மேலெழும்பி சறுக்கலான களிமண் பிரதேசத்தைக் கடந்து இருளினூடே தடுமாறி ஒருவழியாக வீட்டை வந்தடைந்தனர் நம் தோழர்கள் -
மேல்நோக்கித் தள்ளும் காற்று ஓட்டம்! அற்புத பயண அமைப்பு!
அமைப்பு- அற்புதமானதுதான் - ஆனால் நடைமுறை சிக்கல் இருக்கிறது!
மீண்டும் நல்லதொரு ஓய்வை அனுபவிக்கலாயினர் -
சோம்பேறிகளா - நாள் முழுக்க இப்படி ஓய்ந்து உட்கார்ந்து கிடப்பதற்குப் பதில் நீங்களும் எங்களோடு வந்திருக்கலாம். ஹம் இளவயதினராக இருந்தாலும் உங்களுக்கு துடிப்பும் காணாது துணிச்சலும் கிடையாது!
இங்கே தலைமுறை இடைவெளி கருத்து வேறுபாடுகளுக்கும் சச்சரவுக்கும் அடிகோலிக் கொண்டிருந்த அதே வேளையில்,
We are the World! இதில் நாங்கள் இனிய மோலாக்குகள்!
முற்றும்
உலகம் சுற்றும் அலிபாபா - பாகம் II
தென்னமெரிக்காவின் மாயாவி


ஒரு சூப்பர் நியூஸ்!
அடுத்த மாதம் முதல் ஜூனியர் & மினி லயன் இணைந்து ஒரே காமிக்ஸாக வெளி-வருகிறது!
புதிய பகுதிகள்!
துப்பறியும் கதைகள்!
ரூ. 2-50


ஒரு சூப்பர் நியூஸ்!
அடுத்த மாதம் முதல் ஜூனியர் & மினி லயன் இணைந்து ஒரே காமிக்ஸாக வெளி-வருகிறது!
பகுதிகள்!
றியும் கதைகள்!
ரூ. 2-50


புதிர் குகை!
ஜூனியர்
லயன் காமிக்ஸ்
ரூ. 1-25
முழு வண்ண சித்திரக் கதை!